RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.34256/ijmrd2124

# Saiva Siddhantha Elements of Thirukovaiyar

# திருக்கோவையாரின் சைவ சித்தாந்தக் கூறுகள்

**K. Maheshwari [a, *]**

[a] Department of Tamil, A.V.C. College, Mayiladuthurai-609305, Tamil Nadu, India.
*Corresponding Author Email: maheswari1576@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijmrd2124
Received: 30-04-2021; Accepted: 23-06-2021; Published: 25-06-2021

**Abstract:** The saivism is the most famous philosophy in the world philosophy. The sastra were the forerunner and the basis. Saivite thirumurai hence, the two eyes of Saivism are referred to as the thothras and the shastras. The saivism are the three tools of the pati, pasu, pasam. They are arrogant, contempt, maya and the three tools of love, the life pathi gnana, which is sick of the three tools, is special. The Lord has given life to other coughs called maya ganmam to remove the tools that are painful. The two types of yoga, the pure state of the original yoga, and the sukhumustate, are the means of forgetting oneself. It is summarized in the study that those who reach the lord and constantly worship him will attain one or the other stage of liberation.

**Keywords:** Lord, Philosophy, Saivism, Thirumurai

**Language:** **Tamil**

## முன்னுரை

சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாக கருதப்படுவர் சிவபெருமானாவார். இச்சிவழிபாடு இமயம் முதல் குமரி வரையில் பரவியுள்ளது. சைவ சமயத்திற்கு உரிய நூல்கள் தோத்திர நூல்கள் என்றும், சாத்திர நூல்கள் என்றும் இரண்டாக வகைப்படுத்தி கூறுகின்றனர். திருஞான சம்மந்தர் அருளிய தேவாரம் முதலாம் சேக்கிழாரின் பெரியபுராணம் ஈறாக உள்ள பன்னிரு திருமுறை நூல்களிலும் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சைவ சிந்தாந்தக் கருத்துக்கள் பற்றி காண்போம்.

## சைவசித்தாந்தம்

உலக தத்துவ அரங்கில் தனிப்புகழ் பெற்ற தத்துவம் சைவ சித்தாந்தம் ஆகும். சிவன் தன் சூழல் போற்றி வாழும் சைவசமயத் தத்துவங்களை வகுத்துத் தருவது சாத்திர நூல்கள், சாத்திர நூல்களுக்கு முன்னோடியாகவும், அடிப்படையாகவும் அமைந்தன. சைவத் திருமுறைகள் எனவே தான் சைவ சமயத்தின் இரண்டு கண்களாகத் தோத்திரங்களையும், சாத்திரங்களையும் குறிப்பிடுவர்.

சிவத்தொடர்புற்று சைவம் சிவநெறிச் சார்பான நுண்ணிய முடிவுகளை உடையது சித்தாந்தம் வேத ஆகமப் பொருள் ஒருமை காண்பார். வேதத்தின் முடிவு வேதாந்தம் வேதாந்தத்தின் முடிவு சித்தாந்தமாதலின் வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தம் என்றார் சைவசித்தாந்தம் என்ற சொற்றொடர் திருமூலமாமுனிவர் செப்பிய திருமந்திர நூலில் கூறப்பட்டுள்ளது.

கற்பன கற்குக் கலைமன்னு மெய் யோக

முற்பத ஞான முறை முறை நாண்ணியே

சொற்பா மேவித் துர்சற்று மேலான

நற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே"

என்ற பாடலின்வழி அறிய முடிகின்றது (Kandhasamy, 1995).

## இறைவன் ஒருவனே

சைவ சித்தாந்தக் கருத்துக்களில் தலையாயது இறைவன் ஒருவனே அவன் சிவபெருமான். அவனே மற்றயை தெய்வங்கள் யாவற்றுக்கும் முதல்வன் என்பதாகும்

"ஒளிவளர் தில்லை ஒருவன்"

"வான் புலியூர் ஒருவன்"

என்ற பாடல் வரிகள் மூலமாக இறைவன் ஒருவனே என மணிவாசகர் உறுதிப்படுத்துகிறார்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என திருமந்திரம் கூறுகிறது. 'கருந்திறல் ஒருவன்' என்ற புறநானூற்று வரியும் இறைவன் ஒருவன் எனக் கூறுவது ஒப்பு நோக்கத்தக்கது. இறைவன் முன்னைப்பழம் பொருட்டும் பழம் பொருள் ஆவான் சிவபெருமான தோற்றமில்லா காலத்தவராய் இருப்பதை 'ஆதிரையன'; என்ற சங்க நூல்கள் குறிக்கின்றன.

"மலர்பொழில் தில்லை தொல்லோன்"

என்ற பாடல் மூலம் இறைவன் மிகப் பழமையானவர் என்றும் தோற்றமும் முடிவும் இல்லாதவர் என்றும் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

## ஐந்தொழில்

உலக உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் ஐந்தொழில்களை செய்து வருகின்றான். அத்தொழில்கள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவையாகும். மறைத்தல், அருளல் என்ற இரண்டு தொழில்களும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் அடங்கும்.

## படைத்தல்

உயிர்களுக்குரிய வினைகள் தீர்ப்பதற்கு பொருட்டு இறைவன் படைத்தல் தொழிலை செய்கின்றான். இதனையே

"தவவினை தீர்ப்பவன்"

"வினை கெட செய்தவன்"

என்று மாணிக்கவாசகர் கூறுகிறார் (Muthappan 2016).

## காத்தல்

வினையை அனுபவிக்கும் பொருட்டே அதாவது இறைவன் அருளிய தனு, கரண, புவன போகங்களை அறியாமல் நிறுத்திப் பயண்பட செய்வதற்காகவே இறைவன் காத்தல் தொழிலை மேற்கொள்கிறேன் இந்நிகழ்வை,

"காக்கும் செவ்வேற்கிறைஞர்"

என்று சுட்டியுள்ளார்.

## அழித்தல்

உலக இன்பங்களை அனுபவித்தற்காக எடுத்த உடம்பு பிறந்து சூழலும் நிலையிலிருந்து நீங்கி செயலற்றிருக்குமாறு தனு, கரண, புவன போகங்களை பிரித்து விடுதலே அழித்தலாகும் இதனையே

"தொல் பிறவி ஏழும் எழுதாவகை"

"தீவினை தீர்ப்பவன் சிதைத்தோன்"

என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

## முப்பொருள்

பதி, பசு. பாசம் மூன்று பதயின் பெருமைகளை உணரும் வகையில் இறைவன் தேவர்க்கு அறியவனாகவும் அடியார்க்கு எளியனாகவும் அடியார்க்கு இடர்வரின்உடன் வந்து நிர்ப்பவனாகவும் அனைவருக்கும் முன்னால் தோன்றியவனாகவும் உலகியற் பொருள்களனைத்தும் நிறைந்திருப்பவானவும் வேதப் பொருளாகவும் தேவர்களுக்கு அப்பாற்பட்டவனாகவும் தனித் தொழில் புரியும் அரி, சிவன், அரண் என நின்றாலும் ஒருவனே எனவும் எவ்வுரு வந்துக் காண்கிறதும் அருவுpத்தவனாக விளங்குபவனாகவும் அம்மையரால் விளக்கப்படுகிறாள்.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிஇ

..........................

எக்கோலத் தெவ்வுருவாய்

எத்தவங்கள்; செய்வார்க்குப்

அக்கோலத் தவ்வுருவே வாழ்"

என்று பதியின் பெருமையைக் கூறுகின்றார்.

பசு என்பது பாசங்களால் தளைக்கப்பட்ட உயிர்களைக் குறிக்கும். உயிர் என்பது உயர்த்தலை உடையது. இந்த உயிரைக் கூடிய நுண்; பொருளாகும். உயிர் என்பது உடலுமன்று காற்றுமன்று ஐம்பொறியுமன்று உயிர் வேறு, உடல் வேறு இரண்டும் ஒன்றினால் தான் இயக்கம் தோன்றும் இறைவன் ஒருவனே அவனால் உருவாக்கப்பட்ட உயிரானது பல் எண்ணற்றவை என்பதைச் சாத்திரங்களுள்,

"எண்ணரிதாய்"

"அலகிலாவுயிர்"

என பாடல் வழி சுட்டிக்காட்டியுள்ளார்.

பசு என்பது உயிரினைக் குறிக்கும். உயிர்க்கு மூன்று நிசைகள் உண்டு. ஆணவத்ததல் கட்டுண்ட உயிரினை விஞ்ஞான கலர்என்றும் ஆணவம், கன்மம் இருமலர்களால் வினைப்புண்ட உயிரினைப் பிரளயாகலர் என்றும் சகல மலங்களலும் ((மும்மலம்) பிணிக்கப்பட்ட உயிரினைச் சகலர் என்றும் வழங்குவர் சோ. கந்தசாமி இம்மூவகை ஆருயிர்களையும் தோற்றுவிப்பவன் இறைவனே என்பதை அம்மையார் இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பவன் எனக் குறிப்பிடுகிறார்.

பாசம் என்ற சொல்லை கூறும் பொழுது

பாசத்தின் காரென்று"

என்ற அடிகளில் பாசத்தினை அடியோடு அறுத்து இறைவன் தன்னை ஆட்கொண்ட நிலையை மாணிக்கவாசகர் புகழ்ந்துள்ளார்.

## மும்மலங்கள்

சைவ சித்தாந்தம் கூறும் மலங்கள் மூன்றாகும். அவை, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகிய பாசத்தால் பிணிப்புண்ட உயிர் பதி ஞானத்தால் பதியுடன் இரண்டறக்கலத்தல் சிறப்புடையதாகும். துன்பம் தரக்கூடிய அவை மலத்தை நீக்குவத்றகாக மாயை கன்மம் என்னும் வேறு இருமலங்கள் உயிருக்கு ஊட்டி இறைவன் அதன் மூலம் மூவகை மலநீக்கம் செய்கிறார்.

## ஆணவம்

ஆணவம் என்ற சொல்லிற்கு அறியாமை என்று பொருள் ஆன்மா கேவல நிலையில் கருவி காரணங்கள் அற்ற தனி நிலை அறிவு இச்செயலைக் கற்று கிடக்கும் அஞ்ஞானத்தையே மொழி செயல்களால் வளரச் செய்யும் நற்செயலைச் செய்யவிடாமல் தடுக்கும் உயிர்களைத் தவறு செய்யத் தூண்டி கீழ்மைப்படுத்துவது இருள் கூhந்த இடும்பை நிற்கும் ஆணவமலம் கொடியது. இதனை,

"நெடியமால் பிரமனும் நீண்டு மண்ணி"டந்திள்ளம்

நேரடிக் காணாய் படியனார்

என்று ஞானசம்பந்தர் ஆணவத்தினால் சிவபெருமானின் திருமுடியையும், திருவடியையும் தரிசிக்க முடியாமல் போன நிலையினை எடுத்துரைக்கின்றார்.

## கன்மம்

'கன்மம்' என்பது கருமம் என்றே ஒன்றே 'வினை' என்று சொல்வதும் உண்டு கன்மமே செயல்கள் யாவும் கன்மங்களேயாகும். ஆனால் தத்துவ ஞான உலகில் கன்மம் என்ற சொல் சற்று விரிந்த கருத்துடையது. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு நோக்கமுண்டு. பயன்உண்டு அப்பயனை அனுபவித்தலும் ஒரு செயலாகும். இவை அனைத்ததையும் கன்மம் என்ற என்N; குறிக்கும்.

"முந்தைய வல்வினை தீர்ப்பான்; தன்னை"

என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

### மாயை

மா ஆ எனப் பிரிந்து பொருள் கொள்ளப்படுவது மா மாய்வதும் அல்லது ஒடுங்குவதும் ஆ - ஆதல் அல்லது தோன்றுதல்மாயை என்று தோன்றுவதும் ஒடுங்குவதுமான தன்மை ஆகும். உடல். கருள. உலகு நுகர்வுகள்; ஆகியன வினைகுரிய கருவாகும்.

"மாய'; காட்டிப் பிறவி காட்டி

மறாவ மனங் காட்டிக்

காயங்காட்டி தண்ணீர் கொண்டால்

வாழ்த்து போதிரோ"

என்று மாயம் காட்டி பிறவியைக் காட்டி மறவாது மனங்காட்டுதல் கூறப்படுகினற்து இறைவன் தன் நிலையில் அருவாய் நிற்பவன்.

"மலவற்; குரம்பையை"

மும்மலங்காள்; உடையதாகிய உடம்பு என்று குறிப்பிடுகிறார்.

### ஆன்மசத்தி

தசகாரியங்களுள் ஒன்று ஆன்மா சக்தி ஆன்மாதத்துவங்களே அறிந்து அவை தனக்கு வேறானவை என்று உணர்ந்து அவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்தி கொண்டு இறைவனை அடைவறத்கான நெறியைக் கண்டு தன்னைத்த தூய்மைப்படுத்திக் கொள்வதே ஆன்ம சத்தியாகும். இதனை,

"ஓங்கரான் காண்மொழி முலானான்கான்

ஆனெறொன் நுர்ந்துழலும் ஐயாறன்கண்

ஆண்டகன் காண் அணடத்துக் கப்பலான் ஜான்"

என நாவுக்கரசர் கூறுகிறார்.

### ஆதார யோகம்

ஆதார யோகம் என்பத குருவின் உபதேசப்படி வழிபட்டு தெய்வ வடிவைக் கொண்டு அத்தெய்வ வடிவில் மனம் ஒன்றித் தியானித்தல் ஆகும். ஆதார யோகத்தின் சூட்சம நிலை,

"கொண்டது ஒரு பொருளை கோடிபடக் கூறுசெயின்

கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் கொண்ட

இருபொருளும் ஆன்றியே இன்னது இது என்னாது

ஒரு பொருளேயாய் இருக்கும் உற்று"

என்று திருக்களிற்றுப்படியார் குறிப்பிடுகின்றார்.

## நிராதார யோகம்

நிராதார யோகம் என்பது கடந்த சோதி ஆகிய சிவபரம் பொருளைப் பரம் nடிபாருளாக உருவமின்றித் தியானிப்பதேயாகும். அதனை இன்ன உரு இன்நிறம் இன்ன தன்மையுடைய பொருள் என்று எவராலும் கற்பிக்க இயலாத நிலையில் உள்ளது சிவபரம்பொருள் என்று கூறுகின்றது.

"ஆக்கப்படாத பொருளாய்அனைத்தினிலும்

தாக்கத்தான் ஆன்றோரும் தாக்காதே நீக்கு உடன்

நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருள் உடனாய்

நிற்கை நிராதார ஆம்"

என்று நிராதார நிலையை குறித்தது.

## சிவ நிலைனையும், சித்தாந்த தெளிவும்

சித்தம் என்பது அந்தக் கரணங்கள் நான்கில் ஒன்று. இந்த சித்தம் என்னும் அக்கருவியால் தூண்டப்பட்டு உலக பற்றுங்களில் செல்லும் அந்நிலையில் சித்தம் அகப்பற்றுக்களிலிருந்து நீக்குமானால் இறைவனது திருவடி என்னும் பற்றை பற்றும் என்பதனை,

"சித்தந் தெளிவீர் காண் அத்தன் ஆருரைப்

பக்தி மலர் தூவ முக்தியாமே"

என மாறிவரும் பிறவிப் பிணியை அறுக்கவும் மூவினைகளுக்கு காரணமாக வரும் பாசத்தைக் களையவும் ஆன்மாக்களை வாட்டுகின்ற வினைகள் தீரவும் ஆருர் அண்ணலாம் சிவபெருமானை ஒரு போதும் மறவாது நன்மலர் தூவி தொழுது வாழ்த்தினால் பேரின்பமாகிய வீடு என்ற கருத்தைச் சிவஞான போதம்

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா

அம்மலம் கழீஇ அன்பரோடு மரீஇ

மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

என்று நூற்பா வறுகின்றது.

## வீடுபேறு

"ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றெ துணிந்தொழிந்தேன்

ஒன்றோன் உள்ளத்தி னுன்னடைந்தென்"

என்று இறைவன் ஒருவனையே நினைத்திருந்ததை

"அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்று

அவர்க்கோதாம் அன்பாவ தல்லால்"

என துணிந்திருந்ததையும் கூறி தன்னிலை விளக்குகிறார்.

## முடிவுரை

இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுப்பது போல தோத்திர நூல்களில் அமைந்திருப்பது சாத்;திரக் கூறுகளை பின்னர் வந்த சந்தான காரியர்கள் முறைப்படுத்தி சித்தாந்த சாத்திரமாகக் கொடுத்து சைவத்திற்கு அரண் செய்வதாக அமைத்துத் தந்துள்ளனர். உலக மக்கள் தோத்திரப் பொருளை உணர்ந்து கொள்வதற்கு சாத்திர கருத்துக்கள் துணையாக உள்ளன. உலக மக்கள் எல்லோரும் இன்ப வேட்கையும் துன்ப வெறுப்புக் கொண்டு சிற்றின்பத்திலேயே திளைக்கின்றார் இவர்கள் எல்லோரும் தன்னிலையை அடைய இறைவனை இறைவனை உள்ளத்தில் நிறத்த வேண்டும். இத்தகைய சாத்திரச் சிந்தனைகள் அமைந்திருப்பதாக இதுகாறும் கண்டோம்

## References

Muthappan, P, (2016) Thirukkovaiyar, Uma Publication, Chennai, India.

Kandhasamy, S.N., (1995) Thirumurai Literature, International Institute of Tamil Studies, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Maheshwari, Saiva Siddhantha Elements of Thirukovaiyar, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 2 (2021) 17-23. DOI: https://doi.org/10.34256/ijmrd2124